RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI


தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 140 | மே.26, 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## 4 மாநிலங்களின் 5 சட்டப்பேரவைகளுக்கு ஜூன் 19ல் இடைத்தேர்தல்: தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி: மே.26-

நான்கு மாநிலங்களில் காலியாக உள்ள 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஜூன் 19ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தின் இரண்டு சட்டப்பேரவைத் தொகுதிகள், கேரளா, மேற்குவங்கம், பஞ்சாப் மாநிலங்களில் தலா ஒரு பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது. வாக்குகள் ஜூன் 23ம் தேதி எண்ணப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தில், காடி தொகுதியின் சட்டபேரவை உறுப்பினர், கார்சந்த்பாய் பஞ்சாபாய் சோலங்கி மரணமடைந்ததைத் தொடர்ந்து அத்தொகுதி காலியாக உள்ளது. மற்றொரு தொகுதியான விஸ்வதாரின் எம்எல்ஏ பயானி பூபேந்திர கந்துபாய், தனது பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அத்தொகுதியும் காலியாக உள்ளது.

கேரளாவின் நிலாம்பூர் தொகுதியின் தற்போதைய எம்எல்ஏ பி.வி. அன்வர் ராஜினாமா செய்ததாலும், பஞ்சாப் மாநிலத்தின் லூதியான தொகுதி எம்எல்ஏ குர்பிரீத் பஸ்ஸி கோகி மற்றும் மேற்குவங்கத்தின் காளிகஞ்ச் எம்எல்ஏ நசிருத்தீன் அஹமது ஆகியோர் உயிரிழந்ததாலும் மேற்சொன்ன மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளும் இடைத்தேர்தலைச் சந்திக்க இருக்கின்றன.




## என்டிஏ முதல்வர்கள், துணை முதல்வர்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி தலைமையை பாராட்டி தீர்மானம்!

புதுடெல்லி: மே.26-

தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்வர்கள் மற்றும் துணை முதல்வர்களின் கூட்டம் டெல்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடந்தது. இதில், ஆயுதப்படைகளின் வீரத்தையும், பிரதமர் மோடியின் தலைமையையும் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை சிவசேனா தலைவரும் மகாராஷ்டிரா துணை முதல்வருமான ஏக்நாத் ஷிண்டே முன்மொழிந்தார். அந்தத் தீர்மானத்தில் ஆபரேஷன் சிந்தூர் இந்தியர்களின் தன்னம்பிக்கையை அதிகரித்துள்ளது என்று கூறப்பட்டிருந்தது. பிரதமர் மோடியின் தலைமையை பாராட்டியிருந்த தீர்மானம், அவர் (மோடி) எப்போதும் ஆயுதப்படைகளை ஆதரித்து வந்துள்ளதாகவும், ஆபரேஷன் சிந்தூர் பயங்கரவாதிகளுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் தகுந்த பதிலடி கொடுத்துள்ளது என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா, சுமார் 19 முதல்வர்கள் மற்றும் துணை முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

சாதிவாரி கணக்கெடுப்பு, மோடி அரசின் மூன்றாவது பதவிகாலத்தின் முதலாமாண்டு கொண்டாட்டம், நல்லாட்சி விவகாரங்கள் ஆகியவை கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்ளன என்று நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த பாஜகவினர் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் நடைபெறும் விவாதங்களின் குறிப்பிட்ட பகுதிகள், என்டிஏ ஆளும் மாநில அரசுகளின் சிறந்த நடைமுறைகளுக்கு அர்பணிக்கப்பட்டுள்ளது.

பல மாநில முதல்வர்கள் தங்கள் அரசுகளின் குறிப்பிடத்தக்க சாதனைகள், திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தனர். இந்தக் கூட்டத்தில் ஏப்.22ம் தேதி பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.




■ மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் ஆகியோர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கச் செயலாளர்கள் மற்றும் அனைத்து இணைத்துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பதிவு சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தா.கிறிஸ்துராஜ் இ.ஆ.ப. அவர்கள், மாநகர காவல் துணை ஆணையர் திருமதி தீபா சத்தியன் இ.கா.ப. அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கோ.மலர்விழி, பொது மேலாளர் (ஆவின்) திருமதி சுஜாதா, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.

# ‘‘மாநில உரிமைகளை திமுக ஒருபோதும் விட்டுக் கொடுக்காது’’

## தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

சென்னை, மே.26-

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். இதில் மாநில நலன் சார்ந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியிருந்தார். இந்த சூழலில் திமுக தொடர்களுக்கு கடிதம் ஒன்றை அவர் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

“நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கருணாநிதியின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல். பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் பங்கேற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக தலைநகர் டெல்லிக்கு, தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் செல்கிறேன் என்ற செய்தி வெளியானதுமே, அரசியல் எதிரிகளின் அடிவயிற்றில் புளிகரைத்தது போன்ற உணர்வு ஏற்பட்டு, வழக்கம்போல வன்மத்தை வெளிப்படுத்தத் தொடங்கினார்கள்.

‘இத்தனை ஆண்டுகளாக நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இந்த முறை கலந்து கொள்வது ஏன்?’ என்றும், ‘டாஸ்மாக் விவகாரத்தில் அமலாக்கத்துறை நடத்திய ரெய்டுகளில் கிடைத்துள்ள ஆவணங்களால் எதிர்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் பிரதமர் மோடியைச் சந்திக்க முதல்வர் செல்கிறார்’ என்றும், ‘வெள்ளைக் கொடி ஏந்திச் செல்கிறார்’ என்றும் கற்பனைச் சிறகுகளைப் பறக்கவிட்டு, அலாதி இன்பம் கண்டனர் அரசியல் எதிரிகள்.

திமுகவைப் பொறுத்தவரை இன்றல்ல நேற்றல்ல, அரை நூற்றாண்டுக்கு முன்பே முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ‘ஆதரவளிப்பதாக இருந்தாலும், எதிர்ப்பதாக இருந்தாலும் தன் நிலையில் உறுதியாக இருக்கும் இயக்கம் திமுக’ என்பது இந்தியாவின் பிரதமராக இருந்த இரும்புப் பெண்மணியின் சொற்கள். முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் போன்ற பண்பட்ட அரசியல் தலைவர்களும் திமுகவின் நிலைப்பாட்டை நன்கு அறிந்தவர்கள்.

இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி குறித்து மாநில முதல்வர்களுடன் பிரதமர் ஆலோசிப்பதற்கான நிதி ஆயோக் கூட்டம் என்பதாலும், இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்கு மிக முக்கியமானதாகக் கடந்த 4 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் நிலைப்பெற்றிருப்பதாலும், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதியாக, மாநிலத்தின் முதல்வராக நானும் அதில் பங்கேற்கத் தீர்மானித்தேன். அதற்கான அறிவிப்பும் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டு, ஊடகங்களில் வெளியானது.

குடும்பச் சொந்தங்கள் மீதும் வியாபாரக் கூட்டாளிகள் மீதும் தமிழ்நாட்டிலும் கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களிலும் ஒன்றிய அரசின் புலனாய்வு நிறுவனங்கள் ரெய்டு நடத்தியதும், சொந்தக் கட்சியினர் உள்பட யாருக்கும் தெரியாமல் அவசரமாக டெல்லிக்குப் பறந்து சென்று, அங்கு மீடியாக்கள் சூழ்ந்து கொண்டதும், கட்சி அலுவலகத்தைப் பார்க்கப் போகிறேன் என்று பம்மாத்து செய்து, நான்கு கார்கள் மாறி மாறி, உள்துறை அமைச்சர் அமித் ஷாவைப் பார்த்து, தன்னையும் தன்னை நம்பியுள்ள தொண்டர்களின் அடையாளமான கட்சியையும் ஒட்டுமொத்தமாக அடமானம் வைத்துக் கூட்டணி அமைத்தவர், என்னுடைய டெல்லிப் பயணம் குறித்து ஏதேதோ அளந்துவிட்டதை ரசித்தபடியே டெல்லிக்குப் புறப்பட்டேன்.



பிரதமர் மோடி தலைமையில் நடந்த கூட்டத்தில் பல மாநில முதலமைச்சர்களும் பங்கேற்ற நிலையில், அனைவரையும் அவர் வரவேற்றிட, முதல்வர்களும் பிரதமருடன் இயல்பாக அளவளாவினர். மாநிலங்களின் பங்களிப்பு இல்லாமல் இந்தியாவின் வளர்ச்சி இல்லை என்பதைத் திமுக தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், இந்தக் கூட்டம் அதற்கேற்ற வகையில் இருந்ததையும் உடன்பிறப்புகளான உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

2045ஆம் ஆண்டில் 30 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை நோக்கி இந்தியா பயணிக்க வேண்டும் எனத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 4.5 டிரில்லியன் டாலராக இருக்கும் என்பதைப் பிரதமரிடம் தெரிவித்தேன். அதாவது, தற்போது இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 10% அளவிற்கு உள்ளது. அது 15% அளவிற்கு அமையும் என்பதையும், அதற்கேற்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை திராவிட மாடல் அரசு முன்னெடுத்திருக்கிறது என்பதையும் இந்தியத் தலைநகரில் பெருமையுடனும் நம்பிக்கையுடனும் தெரிவிக்க முடிந்தது.

தமிழ்நாடு எப்போதும் இந்தியாவின் வளர்ச்சிக்கான குருதியோட்டமாக இருப்பதை நாடு நன்கறியும். குறிப்பாக, திமுக ஆட்சி அமையும்போதெல்லாம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியுடன் இணைந்த அளவிலான மாநில வளர்ச்சியை முன்னெடுப்பது வழக்கமாக உள்ளது. அதுபோலவே, இந்தியாவின் பாதுகாப்பு என்று வரும்போது எவ்வித சமரசமுமின்றி, நாட்டின் ஒற்றுமைக்காகத் தன்னை அர்ப்பணிக்கும் உண்மையான தேசப்பற்று கொண்ட இயக்கமாகத் திமுக இருப்பதை முன்னாள் முதல்வர் அண்ணா காலத்திலிருந்தே நாடு கண்டு வருகிறது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி, அதே வழியைத்தான் மேற்கொண்டார். முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி வழியில்தான், இந்திய எல்லை மாநிலமான காஷ்மீரில் ஊடுருவி, அப்பாவிச் சுற்றுலாப் பயணிகளை ஈவிரக்கமின்றி கொன்ற தீவிரவாதிகளின் கொடுஞ்செயலுக்குச் சட்டமன்றத்தில் கண்டனம் தெரிவித்ததுடன், தீவிரவாத ஒழிப்பிற்காக இந்திய ராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவாக இருப்போம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் சென்னையில் முதலமைச்சரான உங்களில் ஒருவனான என் தலைமையில் பேரணியும் நடைபெற்றது.

பாஜக ஆளும் மாநிலங்களின் முதல்வர்களே இத்தகைய பேரணியை நடத்தவில்லை என்றும், திமுக அரசு ஏன் நடத்துகிறது என்றும் உள்நோக்கத்துடன் வைக்கப்பட்ட விமர்சனங்களைப் புறந்தள்ளி, கூட்டணிக் கட்சியினர் பங்கேற்புடனும், முன்னாள் படைவீரர்கள், பல்வேறு அமைப்பினர், பொதுமக்கள் பங்கேற்புடனும் அந்தப் பேரணி வெற்றிகரமாக நடந்து நம் ஒற்றுமையை வெளிப்படுத்தியது. இந்தியாவில் தீவிரவாதத்திற்கு இடமில்லை என்பதை வெளிநாடுகளில் வலியுறுத்தும் குழுக்களில், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்றுள்ள இந்திய குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்று, தன் பங்களிப்பை சிறப்பாக செய்து வருகிறார் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் கழகத் துணைப் பொதுச்செயலாளருமான தங்கை கனிமொழி எம்.பி.

அரசியல் நிலைப்பாடு என்பது வேறு. அரசுடன் நாட்டின் நலன் கருதி ஒத்துழைப்பது என்பது வேறு. அந்த வகையில்தான், பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி குறித்த மாநில முதல்வர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று, தமிழ்நாட்டின் நிலையைத் தெரிவித்ததுடன், பிரதமரிடம் தமிழ்நாட்டிற்கான திட்டங்களையும், நிலுவையில் உள்ளவற்றையும் நேரடியாகவே வலியுறுத்தினேன். நாட்டின் நலனை எப்படி திமுக விட்டுக்கொடுக்காதோ, அதுபோல மாநில உரிமைகளையும் ஒருபோதும் விட்டுக்கொடுக்காது.

மிரட்டலுக்கு அடிபணிந்து கட்சியை அடமானம் வைக்கும் வழக்கம் நம்மை விமர்சனம் செய்பவர்களின் தனிப்பட்ட உரிமையாக இருக்கிறது. நமக்கோ, மாநில உரிமையே முதன்மையானதாக உள்ளது. அதில் எவ்வித சமரசமுமின்றி, நீதிமன்றத்தில் சட்டப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்டு வருகிறோம். அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, சிபிஐ போன்றவை திமுகவினரைக் குறிவைத்ததுபோல இந்தியாவில் வேறு எந்தக் கட்சியையும் குறிவைத்ததில்லை. அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டு சட்டரீதியான போராட்டத்தின் மூலம்தான் வென்று வருகிறோமே தவிர, எதிர்க்கட்சியைப் போல அடிமை சாசனம் எழுதிக் கொடுத்ததில்லை. அதுவும் அதிமுக ஆட்சியில் நடந்த டாஸ்மாக் முறைகேடுகள் தொடர்பான எஃப்ஐஆர்கள் சம்பந்தமாக அமலாக்கத்துறை நடத்திய ரெய்டுக்குத் திமுக ஏன் சமரசம் செய்ய வேண்டும்? அமலாக்கத்துறையின் நடவடிக்கைகள் சட்டமீறலானவை என்பதை உச்சநீதிமன்றக் கருத்துகள் மூலம் உறுதி செய்திருக்கும் அரசுதான் திராவிட மாடல் அரசு.

எத்தனை முறை விளக்கமளித்தாலும் எதிரிகள் பழைய மாவையே புளிக்கப் புளிக்க அரைத்துக் கொண்டிருப்பார்கள். திருந்தவோ, வருந்தவோ மாட்டார்கள். தமிழ்நாட்டு மக்கள் அவர்களை விரும்பவும் மாட்டார்கள். 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் திராவிட மாடல் ஆட்சியே தொடரும் என்ற உறுதியை மக்கள் எடுத்துள்ளனர். அவர்களுக்கான பணியை மேற்கொள்வதே நம் கடமை.

தேர்தல் களமும் மக்கள் பணியும் இணைந்துள்ள நிலையில், உடன்பிறப்புகளான உங்களை ஜூன் 1 அன்று மதுரையில் நடைபெறும் கழகப் பொதுக்குழுவில் சந்திக்க ஆவலாக உள்ளேன். உங்களால் நான் கழகத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, தலைநகர் சென்னைக்கு வெளியே நடைபெறுகின்ற முதல் பொதுக்குழு. தமிழ் வளர்த்த நகரமாம் மதுரையில் பொதுக்குழுவை நடத்துவதற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மூர்த்தி அனுமதி பெற்று, அதற்கான ஏற்பாடுகளை அவருக்கேயுரிய முறையில் சிறப்பாக மேற்கொண்டு வருவதை நாள்தோறும் கேட்டறிந்து வருகிறேன்.

திராவிடத்தின் அடுத்த தலைமுறை பாய்ச்சலுக்கும், தேர்தல் களத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கும், ஆர்த்தெழும் இயக்கமான திமுக எவருக்கும் எப்போதும் அடிபணிவதில்லை என்பதை உணர்த்தி, எதிரிகளின் எதிர்பார்ப்பைத் தவிடுபொடியாக்கும் நம் கழகத்தின் நிலைப்பாட்டை உரக்க வெளிப்படுத்தவும் கூடல் நகரில் பொதுக்குழு கூடுகிறது.

உடன்பிறப்புகளை எதிர்நோக்கி மதுரை பொதுக்குழுவுக்கு உங்களில் ஒருவனான நான் ரெடியாகிவிட்டேன். நீங்களும்தானே?” என தெரிவித்துள்ளார்.

## பருவமழை முன்னெச்சரிக்கை: கொடைக்கானலுக்கு வந்த பேரிடர் மீட்புக் குழு

திண்டுக்கல்: மே.26-

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு முன்னதாகவே துவங்கியுள்ளது. இதையடுத்து ஒரு சில மாவட்டங்களில் கன மழை பெய்ய இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதையடுத்து தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகமாக கனமழை பெய்யும் பகுதியான கொடைக்கானல் மலைப் பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பேரிடர் மீட்புக் குழுவினர் இன்று கொடைக்கானல் வருகை தந்தனர்.



கடந்த சில தினங்களாகவே கொடைக்கானலில் சாரல் மழை பெய்யத் துவங்கி தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இது கனமழையாக மாற வாய்ப்புள்ளதால் பேரிடர் மீட்புக் குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பணிக்கு தேவையான கருவிகளையும் தயார் நிலையில் வைத்துள்ளனர்.

மலைச் சாலையில் மரங்கள் சாய்ந்தால் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீராக்கும் நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். கொடைக்கானலுக்கு வருகை புரிந்துள்ள 25 பேர் அடங்கிய மீட்புக் குழுவினர் 24 மணி நேரமும் மலைப் பகுதிகளில் மழையால் ஏற்படும் பாதிப்புக்களை கண்காணித்து, மழையால் ஏற்படும் இயற்கை பேரிடர்களை உடனுக்குடன் சீர் செய்ய உள்ளனர். கொடைக்கானல் வட்டாட்சியர் பாபு, பேரிடர் மீட்புக்குழுவினருக்கு தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

# ‘மாநில நிதியை போராடிப் பெறுவது கூட்டாட்சிக்கு அழகல்ல’ நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

புதுடெல்லி, மே.26-

“மாநிலத்துக்கு கிடைக்க வேண்டிய, தரப்பட வேண்டிய நிதியானது எப்போதும் போராடி, வாதாடி, வழக்குப் போட்டு பெற வேண்டிய நிலைமையில் இருப்பது கூட்டாட்சி இந்தியாவுக்கு அழகல்ல. இது மாநிலத்தின் வளர்ச்சியையும் பாதிக்கும், இந்தியாவின் வளர்ச்சியையும் பாதிக்கும்,” என்று புதுடெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் இன்று (மே 24) நடைபெற்றது. இதில் பங்கேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது: “பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் பங்கேற்றுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். எங்களது அரசில் 2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து, செயலாற்றி வருகிறோம். அதன் பயன்கள்தான் புள்ளிவிவரங்களாக, வளர்ச்சிக் குறியீடுகளாக எதிரொலிக்கின்றன.

குறிப்பாக, அண்மைக் காலங்களில் ஆண்டுதோறும் 8 விழுக்காட்டுக்கும் மேலான வளர்ச்சி. கடந்தாண்டு நாட்டிலேயே அதிகமாக 9.69 விழுக்காடு வளர்ச்சி என்ற பாய்ச்சலில், இந்திய விடுதலையின் நூற்றாண்டில் (2047ல்), 4.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற சவாலை எங்கள் முன் வைத்துக்கொண்டு உழைத்து வருகிறோம். இந்தியாவின் இலக்கான 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தில், எங்களது பங்களிப்பு வலுவாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் தொழில்மயமாகியுள்ளது. ஆட்டோமொபைல் முதல் பசுமை ஹைட்ரஜன் வரை, அனைத்து வளர்ந்து வரும் துறைகளிலும் வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளோம். இந்தியாவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 விழுக்காட்டு பெண் பணியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். நகரமயமாக்கலில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது!



அதிகரித்து வரும் இந்த நகர்ப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகள், நல்ல உட்கட்டமைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை வழங்குவது நம்முடைய கடமை. நாட்டிலுள்ள நகர்ப்புறங்களின் மேம்பாட்டிற்கு பெருமளவிலான நிதியைக் கொண்ட ஒரு பெரிய திட்டம் அவசியம். ‘அம்ருத் 2.ஏி’ திட்டம் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இந்நிலையில், சிறந்த உட்கட்டமைப்பு, இயக்கம் மற்றும் சுகாதாரத்தை மையமாகக் கொண்ட ஒரு புதிய நகர்ப்புற மறுமலர்ச்சித் திட்டத்தை உருவாக்குவது அவசரத் தேவையாகும். இதுபோன்ற ஒரு திட்டத்தை விரைவில் நீங்கள் உருவாக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

‘சுத்தமான கங்கை’ திட்டம் கங்கை நதியை மேம்படுத்துவதிலும், மீட்டெடுப்பதிலும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. ஆறுகள் நமது நாட்டின் உயிர்நாடியாக இருப்பதால், தமிழ்நாட்டில் உள்ள காவிரி, வைகை, தாமிரபரணி உள்ளிட்ட முக்கியமான ஆறுகளையும், நாட்டிலுள்ள பிற முக்கியமான ஆறுகளையும் சுத்தம் செய்து மீட்டெடுக்க இதேபோன்ற திட்டம் தேவை. எனவே, காவிரி, வைகை, தாமிரபரணிக்கு புதிய திட்டத்தை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும். இந்தத் திட்டங்களுக்கு எல்லாம், அனைத்து மாநிலங்களுக்கும் தொடர்பு மொழியாக இருக்கும் ஆங்கிலத்தில் பெயரிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அவற்றை மாநிலங்கள் தங்களது மொழியில் மொழிபெயர்த்துக் கொள்வார்கள். 2047ம் ஆண்டுக்குள் 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கும், இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கும் பிரதமரின் தொலை நோக்குப் பார்வை பாராட்டத்தக்கது. கடந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில், பிரதமர், ‘மாநிலங்கள் மக்களுடன் நேரடியாக இணைந்திருப்பதால், இந்தத் தொலைநோக்குப் பார்வையை அடைவதில் மாநிலங்கள் தீவிர பங்கு வகிக்கின்றன’ என்று பேசியிருந்தார்.

அவரது தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கு, கூட்டுறவு கூட்டாட்சி என்பது அவசியமான அடித்தளமாகும். எனவே, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் தங்கள் வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு, மத்திய அரசு பாகுபாடின்றி ஒத்துழைப்பு தர வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிஎம் ஸ்ரீ திட்டம் தொடர்பான கல்வி அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், சில மாநிலங்கள் கையெழுத்து போடாததால், ஷிஷிகி நிதி மறுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 20242025ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 2,200 கோடி ரூபாய் மத்திய நிதி தமிழ்நாட்டுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இது அரசுப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் மற்றும் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் படிக்கும் குழந்தைகளின் கல்வியைப் பாதிக்கிறது. எனவே, தாமதமின்றி, ஒருதலைப்பட்ச நிபந்தனைகளை வலியுறுத்தாமல் இந்த நிதியை விடுவிக்குமாறு நான் உங்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்துக்கு கிடைக்க வேண்டிய, தரப்பட வேண்டிய நிதியானது எப்போதும் போராடி, வாதாடி, வழக்குப் போட்டு பெற வேண்டிய நிலைமையில் இருப்பது கூட்டாட்சி இந்தியாவுக்கு அழகல்ல. இது மாநிலத்தின் வளர்ச்சியையும் பாதிக்கும், இந்தியாவின் வளர்ச்சியையும் பாதிக்கும். கடந்த 15ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்ககூடிய வரி வருவாய்ப் பங்கினை 41 விழுக்காடாக உயர்த்தினார்கள். ஆனால் இந்தப் பரிந்துரைக்கு மாறாக கடந்த 4 ஆண்டுகளில் மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 33.16 விழுக்காடு மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசும் மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்திடும் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்குத்தொகை, தொடர்ந்து உயர்ந்து வருவதும், தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நிதி நிலையை மேலும் பாதிக்கின்றது. ஒருபுறம் மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய வரிப் பகிர்வு குறைவதால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள். மறுபுறம், மத்திய அரசு அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு மாநில அரசு செலவிடும் அதிக நிதி என இரண்டுமே மாநில அரசுகளுக்குப் பெரும் சுமையை ஏற்படுத்துகின்றன.

எனவே, மத்திய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வின் பங்கு 50 விழுக்காடு உயர்த்தப்படுவதுதான் முறையானதாக இருக்கும். இதனை மத்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அனைத்து மக்களும் வளமுடன் வாழ்ந்திடும் வகையில், அனைத்து பண்பாடுகளும் செழித்திடும் வகையில், பன்முகத்தன்மை கொண்ட வலிமையான நாடாக இந்தியா திகழ்ந்திட, தமிழ்நாடு தனது சிறந்த பங்களிப்பை என்றும் வழங்கிடும்

தற்சார்புடனும், தனித்துவமான அடையாளங்களுடனும் ஒவ்வொரு மாநிலமும் செழித்து வளரும்போதுதான் ஒன்றுபட்ட வலிமையான இந்தியத் திருநாடு உலக அரங்கில் உயர்ந்து நிற்கும். அதற்கு தமிழ்நாடு எப்போதும் துணை நிற்கும் என்று உறுதியளிக்கிறேன்” என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.



## கள்ளழகர் கோயில் திரும்பியதை கொண்டாடும் விதமாக கள்ளந்திரி கண்மாயில் மீன்பிடி திருவிழா

**மதுரை, மே.26–**

கள்ளந்திரி கிராமத்தில் பாரம்பரிய மீன்பிடி திருவிழா நேற்று நடைபெற்றது. ஆயிரக் கணக்கானோர் மீன்களை அள்ளிச் சென்றனர். மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கள்ளந்திரி அம்மச்சியாபுரம், தொப்புலான்பட்டி உள்ளிட்ட 5 கிராம மக்களுக்கு பாத்தியப்பட்ட ஐந்து கோயில் முத்தன் கண்மாய் கள்ளந்திரியில் உள்ளது. சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த கண்மாயில் ஐந்து கோயிலில் வேண்டுதல் நிறைவேறியவர்கள், மீன் குஞ்சுகளை காணிக்கையாக விடுவர். மேலும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கி, மீண்டும் அழகர் கோயிலுக்கு வந்தடைந்த பிறகு அதை கொண்டாடும் வகையிலும் இந்த மீன் பிடித்திருவிழா நடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

இதற்காக அலங்காநல்லூர், பாலமேடு, மேலூர் கொட்டாம்பட்டி என மதுரை மாவட்டம் மட்டுமின்றி திண்டுக்கல், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இதில் கலந்து கொண்டு மீன்களை ஆர்வமாக பிடித்துச் சென்றனர். அதிகாலை முதலே கண்மாயில் காத்திருந்த நிலையில் கிராம பெரியவர்கள் வெள்ளை வீசி அனுமதி அளித்தவுடன் கண்மாயினுள் இறங்கி மீன்களை பிடிக்க துவங்கினர். இதில் கட்லா, கெளுத்தி, அயிரை, ரோகு, பாப்லட் உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்களை பிடித்த பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.

மீன்பிடித் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டதையொட்டி அப்பகுதியில் அப்பன் திருப்பதி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர்.



## கேரள கடற்கரையில் அபாயகரமான சரக்குகளுடன் மூழ்கிய லைபீரிய கப்பல் 24 பணியாளர்களும் மீட்பு

**திருவனந்தபுரம், மே.26–**

கேரளக் கடற்கரையில் அபாயகரமான சரக்குகளுடன் சென்ற லைபீரிய கொள்கலன் கப்பல் மூழ்கியது. அதில் இருந்த 24 பணியாளர்களையும் இந்தியக் கடற்படையுடன் இணைந்து இந்தியக் கடலோரக் காவல்படை மீட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “லைபீரியக் கொள்கலன் கப்பல் எம்எஸ்சி எல்சா 3 (மிஎம்ஓ எண். 9123221) இன்று (மே 25, 2025) காலை 0750 மணியளவில் கொச்சி கடற்கரையில் மூழ்கியது. அதில் இருந்த 24 பணியாளர்களும் மீட்கப்பட்டனர். 21 பேரை இந்தியக் கடலோரக் காவல்படையும் மூன்று பேரை இந்தியக் கடற்படையின் ஐஎன்எஸ் சுஜாதாவும் மீட்டன. எம்எஸ்சி எல்சா 3 கப்பல் 640 கொள்கலன்களுடன் மூழ்கியது. அவற்றில் 13 ஆபத்தான சரக்குக் கொள்கலன்களும் 12 கால்சியம் கார்பைடு கொள்கலன்களும் இருந்தன. அதில் 84.44 மெட்ரிக் டன் டீசல், 367.1 மெட்ரிக் டன் உலை எண்ணெய் ஆகியவையும் ஏற்றப்பட்டிருந்தன.

மே 24 அன்று, விழிஞத்திலிருந்து கொச்சிக்குச் செல்லும் வழியில் எம்எஸ்சி எல்சா 3 என்ற கப்பல் மூழ்கத் தொடங்கி இருந்தது. உலகளாவிய தேடல் மற்றும் மீட்பு நெறிமுறைகளின்படி, இந்தியக் கடலோரக் காவல்படை ரோந்து கப்பல்கள் மற்றும் வணிகக் கப்பல்களான எம்வி ஹான் யி மற்றும் எம்எஸ்சி சில்வர் 2 ஆகியவையும் உதவிக்காகத் திருப்பிவிடப்பட்டன.

மாலைநேரப் பிற்பகுதியில், ரஷ்யா, உக்ரைன், ஜார்ஜியா, பிலிப்பைன்ஸ் நாட்டவர் உட்பட 24 பணியாளர்களில் 21 பேர் மீட்கப்பட்டனர். மீட்பு ஏற்பாடுகளுக்கு உதவ மூன்று மூத்தப் பணியாளர்கள் கப்பலில் இருந்தனர். இருப்பினும், கப்பலின் நிலை இரவு முழுவதும் மோசமடைந்து, மே 25, 2025 அன்று அது கவிழ்ந்தது. மூன்று பணியாளர்களும் கப்பலை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும் ஐஎன்எஸ் சுஜாதா அவர்களை மீட்டது. இந்த விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் அடங்கிய பதவிகளுக்கு 29ம் தேதி முதல் கலந்தாய்வு தொடக்கம்: டிஎன்பிஎஸ்சி செயலாளர் அறிவிப்பு

**சென்னை, மே.26–**

டிஎன்பிஎஸ்சி செயலாளர் கோபால சுந்தரராஜ் வெளியிட்ட அறிவிப்பு: ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகளில் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) அடங்கிய பதவிகளுக்கான தேர்வுகளில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 20.2.2025 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது. ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகளில் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) அடங்கிய புள்ளியியல் ஆய்வாளர், கணினியர் மற்றும் தடுப்பூசி பண்டகக் காப்பாளர், உதவி நூலகர், நூலக உதவியாளர் நிலை 1, உதவி பொறியாளர் (மின்னியல்) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், உதவி பொறியாளர் (மின்னியல்) தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், உதவி பொறியாளர் (மின்னியல்) பொதுப்பணி மற்றும் உதவி பொறியாளர் (மின்னியல்) இந்து சமய அறநிலையத் துறை பதவிகளுக்கான இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு வருகிற 29ம் தேதி முதல் 30ம் தேதி வரை சென்னை பிராட்வேயில் உள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.




இதே போல ஆராய்ச்சி உதவியாளர், வட்டார சுகாதார புள்ளியியலாளர், செயலக அலுவலர் (சட்டம்), மொழிபெயர்ப்பாளர் மற்றும் இளநிலை மேலாளர் (நிதி மற்றும் கணக்குகள்) பதவிக்கு மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு வருகிற 30ம் தேதி நடைபெறும். நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்குறிப்பாணையினை தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.inலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தேர்வர்களுக்கு அதற்கான விவரம் எஸ்எம்எஸ் மற்றும் இமெயில் மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். தேர்வர்கள் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பயங்கரவாதத்துக்கு எதிரான இந்திய நிலைப்பாட்டுக்கு ஜப்பான் ஆதரவு: சல்மான் குர்ஷித் தகவல்

டோக்கியோ, மே.26-

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு ஜப்பானில் தன்னிச்சையான ஆதரவு இருப்பதாகக் கூறிய முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், இந்தியாவின் அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு ஜப்பானில் கிடைத்த வரவேற்பு திருப்தி அளிப்பதாக தெரிவித்தார்.

ஐக்கிய ஜனதாதளம் எம்.பி. சஞ்சய் குமார் ஜாவின் தலைமையில் ஜப்பான் சென்றுள்ள அனைத்துக் கட்சிக் குழுவில் இடம் பெற்றுள்ள முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியதாவது: இது மிகவும் திருப்திகரமான மற்றும் சிறப்பான பயணமாக இருந்தது. பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு தன்னிச்சையான ஆதரவு கிடைத்தது உற்சாகம் அளிக்கிறது. எந்த ஒரு பயங்கரவாதத்துக்கும் எதிராக இங்கே முழுமையான ஆதரவு இருக்கிறது. மேலும் பஹல்காமில் நமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது.



ஆபரேஷன் சிந்தூரை நிறுத்தி வைப்பதாக நாம் அறிவித்திருக்கிறோம். ஆனால் எதிர்காலத்துக்கு நாம் சில செய்திகளை வெளிப்படையாக வழங்கியிருக்கிறோம். ஜப்பான் போன்ற நாடுகள் அனைத்து வழிகளிலும் நமக்கு ஆதரவளிப்பது மிகவும் முக்கியமானது. பயங்கரவாதத்துக்கு எதிரான நமது நிலைப்பாட்டை ஜப்பான் திறந்த மனதுடன் ஆதரித்துள்ளது.

இந்தியாவா, பாகிஸ்தானா என்ற தேர்வு வரும் போது ஜப்பானுடனான நமது உறுதியான உறவு மிகவும் முக்கியமானதாகிறது. அவர்களுடன் நாம் கொண்டுள்ள பொருளாதார தொடர்பும், அவர்களுடனான அரசியல் தொடர்பும் முக்கியத்துவம் பெறுகிறது. எனவே நாம் இங்கு ஒரு சிறப்பான முன்னுரிமையில் இருக்கிறோம். இவ்வாறு சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

ஐக்கிய ஜனதாதளம் எம்.பி. சஞ்சய் குமார் ஜா தலைமையிலான வெளிநாட்டு தூதுக்குழுவில் சல்மான் குர்ஷித் இடம்பெற்றுள்ளார். தற்போது ஜப்பானில் இருக்கும் இந்தக்குழு, பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்குவதற்காக அடுத்து பிற கிழக்காசிய நாடுகளுக்கு பயணிக்க இருக்கிறது.

இந்தக் குழுவில், பாஜக எம்.பி.கள் அபராஜித சாரங்கி, பிரிஜ் லால், பிரசாந்த் பருஹா, ஹேமங் ஜோஷி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஜான் பிரிட்டாஸ், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அபிஷேக் பானர்ஜி, தூதுவர் மோகன் குமார் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

## பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த குஜராத் இளைஞர் கைது: கடற்படை, பிஎஸ்எப் ரகசியங்களை பகிர்ந்தது கண்டுபிடிப்பு

புது டெல்லி, மே.26-

இந்திய கடற்படை மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படை தொடர்பான முக்கிய தகவல்களை பாகிஸ்தான் முகவருடன் பகிர்ந்து கொண்ட குற்றச்சாட்டில் குஜராத் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்ச் பகுதியைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர் சஹ்தேவ் சிங் கோஹில் (28), 2023 ஆம் ஆண்டு வாட்ஸ்அப் மூலம் தன்னை அதிதி பரத்வாஜ் என்று சொல்லிக்கொண்ட ஒரு பாகிஸ்தான் முகவருடன் அறிமுகமானார். இதனையடுத்து கோஹில், புதிதாக கட்டப்பட்ட மற்றும் கட்டுமானத்தில் இருந்த இந்திய கடற்படை மற்றும் எல்லை பாதுகாப்புப் படை தளங்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அவருக்கு அனுப்பினார் என்று குஜராத் பயங்கரவாத எதிர்ப்புப் படையின் மூத்த அதிகாரி கே.சித்தார்த் தெரிவித்துள்ளார்



இதுகுறித்து பேசிய சித்தார்த், “பிஎஸ்எப் மற்றும் கடற்படை தொடர்பான தகவல்களை அவர் பாகிஸ்தான் முகவருடன் பகிர்ந்து கொண்டதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. எனவே மே 1 ஆம் தேதி கோஹில் முதற்கட்ட விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அப்போது பாகிஸ்தான் முகவர், கடற்படை மற்றும் பிஎஸ்எப் கட்டுமானங்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அவரிடம் கேட்டதை கண்டுபிடித்தோம்.

2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கோஹில் தனது ஆதார் அட்டையில் ஒரு சிம் கார்டை வாங்கி, அந்த எண்ணில் அதிதி பரத்வாஜுக்கு ஓடிபி உதவியுடன் வாட்ஸ்அப்பை செயல்படுத்தினார். அதன் பிறகு, பிஎஸ்எப் மற்றும் கடற்படை தொடர்பான அனைத்து புகைப்படங்களும், வீடியோக்களும் அந்த எண்ணில் பகிரப்பட்டன. கோஹில் வாட்ஸ் அப் மூலம் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளப் பயன்படுத்திய எண்கள் பாகிஸ்தானில் இருந்து இயக்கப்பட்டவை என்பது தடயவியல் பகுப்பாய்வு மூலம் தெரியவந்தது. இதற்காக கோஹிலுக்கு அடையாளம் தெரியாத நபர் ஒருவர் ரூ.40,000 ரொக்கமாக கொடுத்தார்” என்று கூறினார்

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் 26 பேர் கொல்லப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இந்த சூழலில், சமீபத்திய வாரங்களில் பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததாக யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா உட்பட பத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# டெல்லியில் நள்ளிரவில் கொட்டித்தீர்த்த கனமழை: 200+ விமானங்களின் சேவை பாதிப்பு

புதுடெல்லி, மே.26-
தலைநகர் டெல்லியில் பலத்த காற்றுடன் கனமழை விடிய விடிய கொட்டி தீர்த்தது. இதனால் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் சாலைகளில் மழைநீர் தேங்கி போக்குவரத்து பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வானிலை காரணமாக விமான சேவையும் பாதிக்கப்பட்டது.

முன்னதாக, டெல்லி மற்றும் அதையொட்டிய பகுதிகளுக்கு மழை குறித்த ரெட் அலர்ட்டை கொடுத்திருந்தது இந்திய வானிலை ஆய்வு மையம். இந்நிலையில், டெல்லி மட்டுமல்லாது ஹரியானாவின் சில பகுதியிலும் மழை பதிவானது.

டெல்லியில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்று க்கிழமை அதிகாலை வரை விடிய விடிய பெய்த மழை காரணமாக சாலைகளில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சாய்ந்தன. இரவு 11.30 முதல் அதிகாலை 5.30 மணி வரையிலான ஆறு மணி நேரத்தில் சுமார் 81.2 மில்லி மீட்டர் மழை பொழிந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சஃப்தர்ஜங் பகுதியில் மணிக்கு 82 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசியுள்ளது.

பாலம் பகுதியில் 68.1 மில்லிமீட்டர், பூசா 71 மில்லிமீட்டர், மயூர் விஹார் 48 மில்லிமீட்டர், டெல்லி பல்கலைக்கழகம் பகுதியில் 29 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. மழை காரணமாக டெல்லியில் வெப்பநிலையும் கடுமையாக சரிந்தது. பல்வேறு இடங்களில் 20 டிகிரி செல்சியஸ் வெப்பம் என இரவு 1.30 முதல் 2.30 வரை இருந்துள்ளது.

விமான சேவை பாதிப்பு: தேசத்தின் மிகப்பெரிய விமான நிலையமாக உள்ள டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனை விமான நிறுவனங்களும் சமூக வலைதள பதிவு மூலம் உறுதி செய்தன. சனிக்கிழமை இரவு 11.30 முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணி வரையில் 200+ விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டது. 49 விமானங்கள் திருப்பி விடப்பட்டதாக தகவல்.

மழை காரணமாக பல்வேறு விமான நிறுவனங்களின் பயண சேவை பெரிய அளவில் மாற்றம் கண்டுள்ளது. அதனால் பயணிகள் தங்கள் விமானத்தின் புறப்பாடு நேரத்தை அறிந்து விமான நிலையம் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சாலையில் தேங்கிய மழைநீரில் வாகனங்கள் மூழ்கி நிற்கும் வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் சமூக வலைதளத்தில் பகிரப்பட்டு வருகின்றன.

# கல்வியில் சிறந்து விளங்கிய 22 மாணவர்கள் ஜெர்மனிக்கு கல்வி சுற்றுலா



சென்னை, மே.26-
கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கிய 22 மாணவர்கள் ஜெர்மனிக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இது குறித்து பள்ளிக்கல்வித் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு விவரம்: பள்ளி அளவில் கல்வி மற்றும் நூல் வாசிப்பு, நுண் கலைகள், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அறிவிப்பு வெளியிட்டார். அதன்படி, 2022 23ம் கல்வியாண்டில் 142 மாணவர்கள் ரூ.3 கோடியில் மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதேபோல், 2023 24ம் கல்வியாண்டில் 114 மாணவர்கள் சிங்கப்பூர், ஹாங்காங் நாடுகளுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். மாணவர்கள் தங்கள் பயணங்களில் இருந்து விரிவான அனுபவத்தையும், அறிவையும் பெற்றனர். தொடர்ந்து நடப்பாண்டில் 22 மாணவர்கள் மற்றும் ஒரு ஆசிரியர், அலுவலர் என மொத்தம் 24 பேர் ஜெர்மனிக்கு அழைத்து செல்லப்படுகின்றனர். இந்த சுற்றுலாவின்போது ஜெர்மனியில் உள்ள முனிச் பல்கலைக்கழகம், அருங்காட்சியகம், உள்ளிட்ட பல்வேறு இடங்களை பார்வையிடுகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே கல்விச் சுற்றுலாவுக்காக மாணவர்கள் சென்னை விமான நிலையத்தில் இருந்து நேற்று மாலை புறப்பட்டுச் சென்றனர். தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஸ் நாளை (திங்கள்) ஜெர்மனிக்கு புறப்பட்டு சென்று மாணவர்களுடன் இணைந்து கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேற்கூரை சூரியசக்தி மின்நிலையங்களுக்கு நெட்வொர்க் சார்ஜ் கட்டணம் வசூலிப்பதை ரத்து செய்ய வலியுறுத்தல்



சென்னை, மே.26-
"மேற்கூரை சூரியசக்தி மின்நிலையங்களுக்கு நெட்வொர்க் சார்ஜ் கட்டணம் வசூலிப்பதை மின்வாரியம் ரத்து செய்ய வேண்டும்." என தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து நூற்பாலை சங்க நிர்வாகிகள் கூறியதாவது: தமிழகத்தில் வீடுகள், தொழிற் சாலைகளில் மேற்கூரை சூரியசக்தி மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை அமைத்திருக்கும் உயரழுத்த பிரிவினரிடம் இருந்து நெட்வொர்க் சார்ஜ் என ஒரு யூனிட்டுக்கு ரூ.1.04ம், தாழ்வழுத்த பிரிவினருக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ.1.59ம் மின்வாரியம் வசூலிக்கிறது. இந்தக் கட்டணத்தை ரத்து செய்யக்கோரி பல்வேறு தொழில் நிறுவனங்கள் சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

இதை விசாரித்த உயர் நீதிமன்றம் வெட்வொர்க் கட்டணத்தை ரத்து செய்து கடந்த 2024 டிசம்பர் மாதம் உத்தரவிட்டது. இதையடுத்து, வழக்கு தொடர்ந்தவர்களுக்கு மட்டும் அந்தக் கட்டணத்தை மின்வாரியம் வசூலிப்பதை நிறுத்தியது. இந்நிலையில், கட்டணம் ரத்துக்கு காரணமான ஒரு நிறுவனத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த மின்வாரியம், கடந்த மாதம் தடை உத்தரவு பெற்றது.

இந்த உத்தரவை பின்பற்றி தற்போது அனைத்து நிறுவனங்களுக்கும் மீண்டும் நெட்வொர்க் சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. இதையடுத்து, தடை உத்தரவு பெற்ற நிறுவனத்துக்கு மட்டும் நெட்வொர்க் கட்டணத்தை வசூலிக்குமாறும், மற்ற நிறுவனங்களுக்கு வசூலிக்கக் கூடாது என்றும் மின்வாரிய தலைவரிடம் எங்கள் சங்கம் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது. எங்கள் கோரிக்கை மீது மின்வாரியம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்று அவர்கள் தெரிவித்தனர்.

# பனை கனவுத் திருவிழா விழுப்புரத்தில் கண்களுக்கு விருந்து படைத்த 'பாரம்பரியம்'



விழுப்புரம், மே.26-
தமிழ்நாடு பனையேறிகள் பாதுகாப்பு இயக்கம் சார்பில் 4ம் ஆண்டு ஆறாம் தினை பனை கனவுத் திருவிழா விழுப்புரம் அடுத்த நரசிங்கனூர் கிராமம் பனங்காடு என்ற இடத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பாண்டியன் தலைமை தாங்கினார். பனைக்கு மாபெரும் படையர் ஊர்வலம் நடைபெற்றது. மாரியம்மன் கோயில் தெருவில் இருந்து புறப்பட்டு, விழா நடைபெறும் பனங்காடு பகுதியை வந்தடைந்தது. பனையில் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் கள் உள்ளிட்டவற்றை பெண்கள் பானையில் சுமந்து வந்தனர். பின்னர், பனங்காடு என்ற இடத்தில் பனைமரத்தின் முன்பு வைத்து படையலிட்டு வழிபட்டதும், பனையேறிகள் அணிவகுப்பு நடைபெற்றது.

அதன்பிறகு நடைபெற்ற கருத்தரங்கத்தில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், கள் இயக்கத் தலைவர் நல்லசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். அப்போது அவர்கள், பனை மூலம் செய்யப்படும் உணவு உள்ளிட்ட பொருட்களை பட்டியலிட்டும், கள் இறக்கி விற்பனை செய்ய விதிக்கப்பட்டுள்ள தடையை தமிழக அரசு நீக்க வேண்டும் என வலியுறுத்தினர். பனை பொருட்களில் தயாரிக்கப்பட்ட தொப்பி உள்ளிட்ட கைவினை பொருட்கள் மற்றும் உணவு பொருட்களின் கண்காட்சி நடைபெற்றது.

விழாவில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், நாடகம், பாவை கூத்து, சிலம்பம், மல்லர் கம்பம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இதில் திருச்சி, சேலம், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட பனையேறிகள் பங்கேற்றனர். தொழில்முறையாக இருப்பவர்கள் மட்டுமே போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதேபோல் நுங்கு தின்னும் போட்டி, மரபு விளையாட்டு போட்டிகளும் நடத்தப்பட்டது. இறுதியாக, மாவொளி (கார்த்தீ) சுற்றும் நிகழ்வு நடைபெற்றது. பலரும் ஒரே நேரத்தில் மாவொளி சுற்றினர். இதற்கிடையில் பனை மரத்தின் மீது ஏறி அமர்ந்து, விளை நிலங்கள் சூழ்ந்த பகுதிகளை பார்த்து ரசித்தனர். பனை கனவுத் திருவிழாவை குக்கிராம மக்கள் முதல் வெளிநாட்டினர் வரை என பலரும் கண்டு ரசித்தனர்.

தாய்ப்பாலுக்கு இணையானது சீமான்: இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியது: "நம் முன்னோர்கள் பனையை வளர்த்தவர்கள். இப்போது பனையை அழித்துவிட்டு, பாசன கால்வாய்களின் இருபுறமும் சிமென்ட் கலவை தடுப்பு அமைக்கின்றனர், பனையின் முக்கியத் துவத்தை அறியாதவர்கள். நம் விளை பொருட்களுக்கு நாம் விலையை தீர்மானிக்க முடியாது. வேளாண் குடிமகன் இறந்தால், மனித சமூகம் வாழ முடியாது. கருப்பட்டியும், கைக்குத்தல் அரிசியும் அயல்நாட்டு நிறுவனங்களுக்கு எதிரானது. மரபணு மாற்றம் மூலமாக அயல்நாட்டினர் உயிரியல் போர் தொடுத்துள்ளனர்.

சர்க்கரை நோய் இல்லாதவர்கள் யாரும் இல்லை. இதற்கு காரணம், ரசாயன உணவு உட்கொள்வதுதான். கள் உணவின் ஒரு பகுதி. இதை குடித்து இறந்தவர் யாருமில்லை. ஆனால், டாஸ்மாக் மூலம் மதுபானம் விற்பனை செய்து மக்களை குடிக்கச் செய்கின்றனர். இதனால் பலர் உயிரிழக்கின்றனர். டாஸ்மாக் கடைகளை மூடுவோம் என 2016ல் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் கூறினார். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் வாயை மூடிக் கொண்டார். நாட்டிலேயே தமிழகத்தில் தான் மதுபான ஆலையை ஆட்சியாளர்கள் நடத்துகின்றனர். தாய்ப்பாலுக்கு இணையானது பனை மரத்தில் இருந்து வரும் கள். பனையை, தென்னையை எப்படி பயன்படுத்துவது என இளைய தலைமுறைக்கு கற்றுக்கொடுத்து, எதிர்காலத்தில் தற்சார்பு நிலையை அடையச் செய்வதுதான் இலக்கு.

மரபணு மாற்று விதைகள் மூலம் காய்கறி மற்றும் பழங்களை உற்பத்தி செய்கின்றனர். நாட்டு மாடுகளை அழித்து வருகின்றனர். இனத்தை அழிக்க வந்தவன், அவனுக்கு முதல் எதிரியான பனையையும் அழிக்க முயன்று வருகிறான். கள்ளுக்கான தடையை அரசு நீக்கவில்லை என்றால், அரசை நீக்க வேளாண் குடிமக்கள் முன்வர வேண்டும். இது செய்தி அரசாக உள்ளது. செயல் அரசாக இல்லை. வேளாண்மை என்பது வாழ்வியல். பனை நம்முடைய அடையாளம். பனை காடுகளை வளர்க்க வேண்டும். பனையை பாதுகாக்க வேண்டும். நானே நேரடியாக கள் இறக்கும் போராட்டத்தில் ஈடுபடுவேன். 2 நாள் பயிற்சி எடுத்து பனைமரம் ஏறுவேன். எந்த வேலையும் இழிவல்ல. எந்த வேலையும் செய்யாமல் இருப்பதுதான் இழிவு" என்றார் சீமான்.

# எல்லாம் அமலாக்கத்துறை படுத்தும் பாடு; முதல்வர் டில்லி பயணம் பற்றி விஜய் விமர்சனம்

சென்னை: மே.26–
முதல்வர் டில்லி பயணத்துக்கு அமலாக்கத்துறை நடத்திய ரெய்டு தான் காரணம் என்று தவெக தலைவர் நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை;

டாஸ்மாக் ஊழல் விவகாரத்தில், கடந்த மார்ச் மாதம் அமலாக்கத் துறை நடத்திய ரெய்டைத் தொடர்ந்து, சமீபத்தில் டாஸ்மாக் மேலாண் இயக்குநர் மற்றும் தி.மு.க. தலைமையின் குடும்பு உறுப்பினர்களுக்கு நெருக்கமானவர்களின் இடங்களில் ரெய்டு நடத்தப்பட்டது.

இதற்கிடையே, டாஸ்மாக் மீதான அமலாக்கத் துறை விசாரணைக்குத் தடை கேட்டு உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்து இடைக்காலத் தடையையும் வாங்கியது. எனினும், இது நிரந்தரத் தடையல்ல என்பதால் எங்கே பேசினால் விசாரணை தடுத்து நிறுத்தப்படுமோ, அங்கே பேசியாக வேண்டிய சூழ்நிலைக்கு, தி.மு.க., அரசின் முதல்வர் ஸ்டாலின் தள்ளப்பட்டார். அதற்கேற்றாற்போல அமைந்ததுதான் நிதி ஆயோக் கூட்டம்.

சென்ற ஆண்டு இதே நிடி ஆயோக் கூட்டம் டில்லியில் நடந்தபோது அக்கூட்டத்துக்குச் செல்லாமல், தான் செல்லாததற்கான காரணங்களை அடுக்கி முதல்வர் ஸ்டாலின் ஒரு வீடியோ வெளியிட்டார். அப்போது சொன்ன காரணங்கள். இப்போதும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

அப்படியிருக்க. இம்முறை மட்டும் ஏன் செல்ல வேண்டும்? எல்லாவற்றுக்கும் காரணம். அமலாக்கத்துறை படுத்தும் பாடுதான்.

இவ்வாறு அந்த அறிக்கையில் விஜய் தெரிவித்துள்ளார்.



# வேற்று மத ஊழியர்கள் 29 பேருக்கு கட்டாய ஓய்வு: திருப்பதி தேவஸ்தான அதிகாரி தகவல்

திருமலை, மே.26-
திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் பணிபுரியும் வேற்றுமத ஊழியர்கள் 29 பேருக்கு கட்டாய பணி ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாக தேவஸ்தான நிர்வாக அதிகாரி சியாமள ராவ் தெரிவித்தார்.

திருமலையில் 'டயல் யுவர் இஓ' எனும் நிகழ்ச்சியில் 35 பக்தர்களிடம் தேவஸ்தான நிர்வாக அதிகாரி சியாமள ராவ் நேற்று குறைகளை கேட்டறிந்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவின் பேரில் திருமலையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்படுகிறது. வாட்ஸ்அப் சேவை, ஸ்கேன் மூலம் உண்டியல் காணிக்கை செலுத்துதல் என பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வருகிறோம். அன்னதானம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

திருமலையில் 18 இடங்களில் 'திருநாமம்' இடுதல் சேவை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. திருமலையில் 42 தனியார் விடுதிகளின் பெயர்கள் சிறந்த ஆன்மீக பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. திருமலையில் தற்போதுள்ள 68 சதவீத பசுமையை 80 சதவீதமாக உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் பணியாற்றி வந்த வேற்றுமத ஊழியர்கள் 29 பேருக்கு கட்டாய பணி ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சியாமள ராவ் கூறினார்.

# அரசு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர் சேர்க்கை விண்ணப்பிக்க அவகாசம் நீடிப்பு




சென்னை, மே.26-
அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான அவகாசம் கால வரையின்றி நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் 56 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், 3 இணைப்பு கல்லூரிகள் உள்ளன. இவற்றில் தொழில் நுட்பப் பட்டயப் (டிப்ளமோ) படிப்புகளுக்கு 20,635 இடங்கள் உள்ளன. இதில் முதலாமாண்டு மற்றும் பகுதி நேர படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பப் பதிவு இணைய வழியில் கடந்த மே 7ம் தேதி தொடங்கி நேற்றுடன் நிறைவு பெற்றது. முதலாமாண்டு பட்டயப் படிப்புகளுக் கு 11,140 பேர் விண்ணப்பித்துள்ளனர். நேரடி 2ம் ஆண்டு படிப்பில் சேர 12,184 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கிடையே மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கில் பாலிடெக்னிக் கல்லூரி சேர்க்கைக்கான அவகாசமானது கால வரையின்றி நீட்டிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து விருப்பமுள்ளவர்கள் /www.tnpoly.in/ எனும் வலைத்தளம் வழியாக துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும், விண்ணப்பிக்கும் வழி முறைகள், கட்டணம் உட்பட கூடுதல் விவரங்களை மேற்கண்ட வலைத் தளத்தில் மாணவர்கள் அறிந்து கொள்ளலாம் என்று தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது. இது தவிர கல்லூரிகளே இனி நேரடியாக விண்ணப்பங்களை வழங்கி சேர்க்கை நடத்தி கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 68 சதவீத இடங்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டன. இந்த ஆண்டு சேர்க்கையை அதிகரிக்கும் விதமாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பள்ளிக்கல்வித் துறையிடம் இருந்து கடந்த 2 ஆண்டுகளாக உயர் கல்வி தொடராதவர்கள் மற்றும் பத்தாம் வகுப்புக்கு பின்பு இடைநின்ற மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. அத்தகைய மாணவர்களை தொடர்பு கொண்டு பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேர்ப்பதற்கான பணிகள் தற்போது முடுக்கிவிடப் பட்டுள்ளதாக துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

# சென்னையில் மழைக்காலம் தொடங்கும் முன்னதாக சாலைகளை சீரமைக்க ரூ.92 கோடி டெண்டர்

சென்னை, மே.26-
சென்னையில் பல்வேறு இடங்களில் சாலைகள் குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றன. இதனால் மழைக் காலத்தில் வாகன ஓட்டிகள் கடும் அவதியடைய நேரிடுகிறது. தென்மேற்குப் பருவமழை முன்கூட்டியே தொடங்கி விட்டதால், மாநகராட்சி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது. அந்த வகையில் ரூ.92 கோடியே 74 லட்சம் செலவில், சென்னை யில் 14 மண்ட லங்களில் 346 சாலைகள் சீரமைக்கப்பட வுள்ளன. இதையொட்டி ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டு, பணி ஆணை மே மாதத்துக்குள் ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இதில்,உள்புறச் சாலை, பேருந்து வழித்தடம், சிமென்ட் கான்கிரீட் சாலை, தார்ச்சாலை என சாலை சீரமைப்புப் பணியானது 21 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இதிலும் 3 பேக்கேஜ் வகைப்படுத்தப்பட்டு உள்ளது. முதலாவது பேக்கேஜின்படி, திருவொற்றியூர், மணலி, மாதவரம், ராயபுரத்தில் ரூ.4 கோடியே 37 லட்சம் மதிப்பீட்டில் 24 சாலைகள் தரம் மேம்படுத்தப்பட உள்ளன. இரண்டாவது பேக்கேஜ்படி, மாதவரம், ராயபுரம், அண்ணா நகர் மண்டலங்களில் ரூ.4 கோடியே 35 லட்சம் மதிப்பீட்டில் 18 சாலைகள் மேம்படுத்தப்பட உள்ளன. மூன்றாவது பேக்கேஜ்படி, மணலி, மாதவரம் திரு வி.க.நகர், அண்ணா நகர் மண்டலங்களில்ரூ. 4 கோடியே 53 லட்சம் செலவில் 21 சாலைகள் தரம் உயர்த்தப்படுகின்றன.

ஒரே ஒப்பந்ததாரருக்கு அனைத்து வேலைகளையும் கொடுத்து வேலை பளுவை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக பலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதனால் தான் பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டு வேலை முடுக்கி விடப்பட்டுள்ளது. சென்னையில் சாலையின் தரம் எவ்வளவு தான் உயர்த்தப்பட்டாலும் பெருமழைக்குத் தாங்குவதில்லை. மீண்டும் மீண்டும் சாலை போட வேண்டிய கட்டாயத்துக்கு மாநகராட்சி தள்ளப்பட்டிருக்கிறது.






■ ஆப்பரேஷன் சிந்தூர் வெற்றி மற்றும் ராணுவத்திற்கு மரியாதை செலுத்தும் வகையில், மூவர்ண கொடி பேரணி பல மாவட்டங்களில் நடந்து வருகிறது. அவ்வகையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக மானாமதுரை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து நகர் பகுதியில் தேசிய கொடியை கையில் ஏந்திய படி பாஜகவினர் பேரணியாக நடந்து சென்றனர்.

# குன்னூர் மலைப்பாதையில் நேற்று இரவு நீர்வீழ்ச்சியில் கட்டுப்பாட்டை இழந்து விழுந்த கார் நான்கு பேர் உயிர் தப்பினர்

குன்னூர், மே.26-

நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் கடந்த ஒரு மாதமாக அவ்வப்போது சாலை விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. நேற்று விடுமுறை நாள் என்பதால் இந்த வழித்தடத்தில் அதிகளவில் வாகனங்கள் சென்று வந்ததால் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டது. இந்நிலையில் நேற்று ஊட்டியை அடுத்துள்ள இத்தலார் கிராமத்தை சேர்ந்த பாலகிருஷ்ணன் அவரது மாமியார் விஜயா உடல்நலம் பாதிக்கப்பட்டு கோவை அரசு மருத்துவக் கல்லூரியில் இருந்து



காரில் அழைத்து வந்துள்ளார்.காரில் இவரது மனைவி ராதா லட்சுமி, மகன் தர்ஷன் ஆதியோர் மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூர் நோக்கி வந்து கொண்டிருந்த போது லாஸ் நீர்வீழ்ச்சி அருகே திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 50 அடி பள்ளத்தில் உருண்டு நீர்வீழ்ச்சியில் தலை குப்புற கவிழ்ந்தது உடனடியாக இந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் தகவல் கொடுத்ததின் பேரில் காவல்துறை மற்றும் வருவாய் துறை, பேரிடர் முதல் நிலை பொறுப்பாளர்கள் விரைந்து சென்று காரில் இருந்த நான்கு பேரையும் ஆம்புலன்ஸ் மூலம்குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதில் ராதாலட்சுமிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதால் மேல் சிகிச்சைக்காக ஊட்டி அரசு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தனர். விஜயா மற்றும் குழு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். பாலகிருஷ்ணன் மற்றும் அவரது மகன் தர்ஷன் ஆகியோருக்கு லேசான காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளது. முட்புதர்களும், மரங்களும் இருந்ததால் கார் கவிழ்ந்தும் கூட உயிர் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த விபத்து குறித்து குன்னூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.கடந்த மார்ச் மாதம் 30ம் தேதி இதே இடத்தில் கார் டயர் வெடித்ததில் 5 பேர் உயிர் தப்பினர் எனவே விபத்தை ஏற்படுத்தும் இந்த பகுதியில் நெடுஞ்சாலைத் துறையினர் தடுப்புகளை வைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





## கல்லலில் தமிழ்நாடு அறிவியல் இயக்க கிளைக் கூட்டம்

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட கல்லல் கிளைக் கூட்டம் கிளைத் தலைவர் தனுசு ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது. டாக்டர் முத்துலட்சுமி துளிர் இல்ல பொறுப்பாளர் நாகரத்தினம் வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக மாவட்ட பொருளாளர் பிரபு கலந்து கொண்டார். உலகப் புகையிலை எதிர்ப்பு தின மற்றும் சுற்றுச்சூழல் தின போட்டிகளை மாணவர்களுக்கு நடத்துவது, உறுப்பினர் சேர்க்கையை தொடர்ந்து அதிகப்படுத்துவது, கல்லலில் ரத்த தான முகாம் நடத்துவது போன்றவைக் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் கடந்த சில நாட்களுக்கு முன்பு திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியில நடைபெற்ற மாநில பயிற்சி முகாமில் அறிவுறுத்தப்பட்ட விஷயங்கள் பற்றியும் இக்கூட்டத்தில் கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஜூன் மாதம் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற உள்ள தெற்கு மண்டல பயிற்சி முகாமில் கலந்து கொள்வது பற்றியும் உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இத்துடன் துளிர் இல்ல செயல்பாடுகளின் மேம்பாடு குறித்தும் உறுப்பினர்கள் விவாதித்தனர். கிளை செயற்குழு உறுப்பினர் விநாயக மூர்த்தி நன்றியுரை கூறினார். சர் சி வி ராமன் துளிர் இல்ல பொறுப்பாளர் சித்திரைச் செல்வி, மற்றும் உறுப்பினர்கள் மருதநாயகம், சுபாஷினி, சுப்புலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## பழனி மலைமீது போகர் ஜெயந்தி விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது

பழனி, மே.26-

பழனி முருகன் கோயில் மலை மீதுள்ள நவபாஷாண முருகன் சிலையை உருவாக்கியவர் சித்தர் போகர். போகரின் ஜீவசமாதி பழனி மலைமீது வெளிப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. பழனி முருகனை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் சித்தர் போகரையும் வணங்கி விட்டுச் செல்கின்றனர். போகர் ஜீவசமாதி அவரின் சீடர் சித்தர் புலிப்பாணியின் வாரிசுகள் இன்றுவரையில் பராமரித்து வருகின்றனர். சித்தர் போகரின் ஜெயந்தி விழா ஆண்டுதோறும் மலை மீது உள்ள போகரின் ஜீவசமாதி விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. சித்தர் போகர் மற்றும் புலிபாணியால் வணங்கப்பட்டு வந்த



பழமையான பச்சை மரகத லிங்கம் மற்றும் புவனேஸ்வரி அம்மனுக்கு பால், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், பழ வகைகள் உட்பட 14 வகையான பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பழனி ஆதினம் ஸ்ரீமத் போகர் சிவானந்த புலிப்பாணி பாத்திர சாமிகள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



## வீடுகள் மீது சாய்ந்து விழுந்து மரம் கண்டுகொள்ளாத வனத்துறை என்று மக்கள் புகார்

நீலகிரி, மே.26-

நீலகிரி மாவட்டம் உதகைக்கு உட்பட்ட சோலூர் பேரூராட்சி அருகில் அமைந்துள்ள சாண்டிநல்லா ஊரில் தற்பொழுது பெய்து கொண்டிருக்கும் கனமழை மற்றும் வீசும் பலத்த காற்றினால் மரம் முறிந்து வீட்டின் மேல் விழுந்தது. அதிஷ்டவசமாக மரம் விழும் நேரத்தில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் யாரும் அங்கு நடமாடவில்லை. வருடம் வருடம் அங்கு வசித்துவரும் மக்களுக்கு இத்தகைய பாதிப்பு ஏற்பட்டு கொண்டே இருக்கின்றது என மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். சம்மந்தபட்டத்துறையினருக்கு பொதுமக்கள் நிறைய மனுக்கள் கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் உடனடியாக சம்பந்தப்பட்ட துறையினர் ஆபத்தில் இருக்கும் மரங்களை அகற்றி அங்கு வசித்து வரும் மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படும் முன் உடனடியாக. நடவடிக்கை எடுத்து தர வேண்டும் என மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



## இந்தியாவுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உறுதியாக இருக்கிறோம்: பாகிஸ்தான் அறிவிப்பு

இஸ்லாமாபாத், மே.26–

இந்தியாவுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உறுதியாக இருக்கிறோம் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது. ஜம்முகாஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த ஏப்ரல் 22ம் தேதி தாக்குதல் நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடியாக இந்திய ராணுவப்படையினர் பாகிஸ்தானின் தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து கடந்த 7ம் தேதி முதல் 10ம் தேதி வரை இரு நாடுகளிடையே போர் நடைபெற்றது. அதன்பின்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அறிவித்தன.

இதனைத் தொடர்ந்து மே 12ம் தேதி, இந்தியா, பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் ஜெனரல்கள் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர். அதில் இரண்டு தரப்பும் எந்த ஒரு துப்பாக்கிச்சூடு அல்லது எல்லை தாண்டிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்ற உறுதிப்பாட்டினைத் தொடர்வது தொடர்பான விஷயம் விவாதிக்க ப்பட்டது.

இந்நிலையில் இந்தியாவுடனான போர் நிறுத்த ஒப்பந்த்தை கடைப்பிடிக்கிறோம் என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: இந்தியாவுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதில் கூறியுள்ளபடி உண்மையாக நடந்துகொ ள்வோம். போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக கடைப்பிடிக்கிறோம்.

இந்தியாவுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து அமலில் உள்ளது. எனவே, போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்வதற்கு காலாவதி தேதி தேவை இல்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பழனியில் அனைவரும் மரம் வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அமைச்சர் சக்கரபாணி மரக்கன்றுகளை வழங்கினார்

பழனி, மே.26-

பழனியில் தொப்பம் பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் பொன்ராஜ் துவங்கிய பப்பிஷேம் தனியார் துணிக்கடையை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி முதல் விற்பனையை துவக்கி வைத்தார். அப்பொழுது விழாவிற்கு வந்த அனை வருக்கும் மரம் வளர்ப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாதுளை மருதம் சப்போட்டா கொய்யா உள்ளிட்ட மரக்கன்றுகளை வழங்கினார். மற்றும் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சலுகைகள் அன்று




மட்டும் வழங்கப்பட்டது. அனைவருக்கும் நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணி சாமிநாதன் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## உதகை ஆறுகளில் வெள்ளப்பெருக்கு: காய்கறிகள் நீரில் மூழ்கின

**உதகை, மே.26–**

கப்பத்தொரை ஆற்று தண்ணீர் கரையோரங்களில் உள்ள தோட்டங்களில் புகுந்தது. பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த கேரட், பீட்ரூட் மலைக்காய்கறிகள் வெள்ள நீரில் மூழ்கி ன. 100 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வெள்ளைப்பூண்டு, உருளைக் கிழங்கு உள்ளிட்ட காய்கறிகள் மூழ்கின.

## சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 2 மாதத்தில் 15 ஆயிரம் மாணவர்கள் சேர்க்கை

**சென்னை, மே.26–**

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் கடந்த 2 மாதங்களில் 15,672 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

சென்னை மாநகராட்சி கல்வி துறையின் கீழ், 206 தொடக்கப் பள்ளிகள், 130 நடுநிலை, 46 உயர்நிலை, 35 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த பள்ளிகளில், 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். சென்னை மாநகராட்சி பள்ளிகளில், 2025-26 ம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. அந்த வகையில், கடந்த 2 மாதங்களில் மட்டும் 15,672 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

இதுதொடர்பாக மாநகராட்சி கல்வித்துறை அதிகாரிகள் கூறியதாவது: மாநகராட்சிப் பள்ளிகளில் ஆண்டுதோறும் 1.12 லட்சம் மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளிகளில் மார்ச் மாதத்துக்குப் பிறகு மாணவர் சேர்க்கை நடைபெறும். இந்த ஆண்டு மே 23ம் தேதிக்குள் 15,672 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மழலையர் வகுப்புகளில் மட்டும் 8 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 2 மாதங்களில் இவ்வளவு மாணவர்கள் சேர்ந்துள்ளது இதுவே முதல்முறை. விஜயதசமி வரை மாணவர் சேர்க்கை நடைபெறும். இந்த ஆண்டு 33 ஆயிரம் மாணவர்களைச் சேர்க்க ஆணையர் அறிவுறுத்தியுள்ளார். இதற்காக மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான சலுகைகள் குறித்தும், கல்வி தரம் மேம்பட்டிருப்பது குறித்தும், 45 ஆட்டோக்கள் வாயிலாக பொதுமக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மழலையர் வகுப்புகளில் காற்றோட்டமான வகுப்பறைகள், பச்சை வண்ணப் பலகைகள், ஸ்மார்ட் போர்டு, விளையாட்டுடன் கல்வியில் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணமயமான புத்தகங்கள் உள்ளிட்டவை உள்ளன. புத்தகப் பைகள், காலணிகள், அடையாள அட்டைகள் வழங்கப் படுகின்றன. பள்ளி சீருடைகள், எழுது பொருட்கள், பாடப்புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், காலை சிற்றுண்டி, பள்ளிக்கு 100 சதவீதம் வருகை தந்த மாணவர்களுக்கு ஊக்கத் தொகை, பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு, மாலை சிற்றுண்டியுடன், மாலைநேர சிறப்பு வகுப்புகள் உள்ளிட்டவை ஏற்படுத்தி தரப்படுகிறது.

மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், கல்வித் தரத்தை மேம்படுத்தவும், விளையாட்டு மற்றும் தற்காப்பு கலைகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. போட்டித் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களை கல்வி சுற்றுலாவுக்கும் அழைத்து செல்கிறோம். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161